
**மே – 03**

# TNPSC துளிகள்

- விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு வசதி ஏற்படுத்தித் தரும் நோக்கில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம் ஏற்றுமதி-இறக்குமதி இணைய வாயிலைத் தொடங்கியுள்ளது. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களின் ஏற்றுமதியானது 2002 – 2007 ஆம் ஆண்டின் ஏற்றுமதிக் கொள்கையால் கட்டுப்படுத்தப்படும்.
- பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன அதிபர் ஜீ ஜின்பிங் இடையேயான முதல் முறைசாரா சந்திப்பு உஹானில் நடந்தது.
- உலகளாவிய வியத்தகு இந்தியா என்ற சுற்றுலாப் பிரச்சாரத்திற்காக மத்திய சுற்றுலாத் துறையுடன் கூட்டிணைந்து கூகுளின் கலை மற்றும் கலாச்சாரப் பிரிவு 360° மெய்நிகர் உண்மை காணொளியை ஆரம்பித்துள்ளது. இந்த காணொளி டெல்லியின் குதுப்மினார், ஹம்பியின் வித்தாலா கோயில்கள், அமிர்தசரஸின் பொற்கோயில் மற்றும் கோவாவின் ஈஸி கோயிங் வைப் உள்ளிட்ட சில மிக முக்கியமான மக்கள் செல்லும் பாரம்பரிய இடங்களை 360° அளவில் காட்சிப்படுத்தும்.
  - இந்த காணொளியானது கூகுளின் இ ஹலோ கேமரா உள்பட சிறந்த 360° காணொளி படப்பிடிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.
- உள்ளடக்கிய வளர்ர்ச்சி எனும் வளர்ச்சி எனும் திட்டத்திற்கு இந்தியாவில் புத்தாக்கல் என்பதற்காக 125 அமெரிக்க டாலரை மறுகட்டுமானம் மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்காக மத்திய அரசு (நிதி அமைச்சகம்) உலக வங்கியுடன் ஒரு கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவிலுள்ள உயிரி மருந்துப் பொருள் மற்றும் மருத்துவ கருவிகள் தொழிலகம் ஆகியவற்றில் உள்நாட்டு புத்தாக்கத்தை ஊக்குவித்தல், சாதாரண உற்பத்திப் பொருள் மேம்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் வணிக செயல்பாட்டை அதிகரித்தல் ஆகியவற்றை இத்திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
  - இந்தத் திட்டம் ஜூன் 2023 உடன் முடிவடையும்.

# தேசியச் செய்திகள்

## ஆர்கயோ புரோமா




- உணவின் தொல்பொருளியல், மானுடவியல் மற்றும் சமூகவியல் ஆகியவற்றின் மீதான இந்தியாவின் முதல் தேசிய அளவிலான மாநாடு மஹாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் நடைபெற்றது.
- ஆர்கயோ புரோமா (Archaeo Puroma) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மாநாடு, உணவை கலாச்சாரமாகக் காண்பது மீதான இந்தியாவின் முதல் தேசிய கூட்டமாகவும் கருதப்படுகிறது.
- இம்மாநாடு, இந்திய கல்வி மைய அறக்கட்டளை மற்றும் மும்பை பல்கலைக்கழகத்தின் ஊடுருவல்

ஆய்வுகள் படிப்புகளுக்கான மையம் ஆகியவற்றால் நடத்தப்பட்டது.

## தேசிய உயிர்மருந்துப் பொருள் திட்டம்

- தேசிய உயிர்மருந்துப் பொருள் திட்டத்தின் கீழ் உயிர் மருந்துப் பொருட்களின் முன் கூட்டிய மேம்பாட்டை நோக்கிய ஆராய்ச்சியை துரிதப்படுத்துவதற்காக மத்திய அரசு உலக வங்கியுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது பின்வரும் நிறுவனங்களுக்கிடையே கையெழுத்து ஆகியுள்ளது.
    - திட்ட செயல்படுத்து அமைப்பு, உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆராய்ச்சி உதவிக் கழகம் (உயிரி தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனம்).
    - பொருளாதார விவகாரங்கள் துறை, நிதி அமைச்சகம்.
    - உலக வங்கி சார்பாக மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கி.
- தேசிய உயிர்மருந்துப் பொருள் திட்டம் ஆனது இந்தியாவில் மருந்துப் பொருள் மேம்பாட்டை அதிகப்படுத்துவதற்கான முதல் தொழில்துறை – கல்வியியல் திட்டமாகும். இத்திட்டத்திற்கு இந்தியாவில் புத்தாக்கு (Innovate in India – i3) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- உலக வங்கியின் 50% கடன் உதவியுடன் ஐந்து ஆண்டு காலத்திற்கு 250 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் 2017 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- உயர்ந்த, மலிவான விலையில் கிடைக்கக் கூடிய உயிரி மருந்துப் பொருளின் திறனான வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு மையமாக இந்தியாவை உருவாக்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## PHDCCI மற்றும் இந்திய யோகா கூட்டமைப்பு - புரிந்துணர்வு ஒப்பந்தம்

- PHD வணிக மற்றும் தொழிற்துறை குழு மற்றும் இந்திய யோகா கூட்டமைப்பு ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
- கிருஷ்ணா பகுதியில் திறன், ஆன்மீகம் மற்றும் கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இரு நிறுவனங்களுக்கிடையே தொடர்பு மற்றும் கூட்டுறவை ஏற்படுத்துவதற்கான வசதியை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தித் தருகிறது.
- கடவுள் கிருஷ்ணரின் பெயரிலான சுவதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் கிருஷ்ணா பகுதியை முக்கிய வசீகர சுற்றுலாத்தளமாக மேம்படுத்துவதற்காக அரசு இந்த முயற்சியை மேற்கொள்கிறது.
- கிருஷ்ணா சுற்றின் கீழ் மேம்பாட்டிற்காக பன்னிரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- அவையாவன
    - துவாரகா (குஜராத்)
    - நாத்ட்வாரா, ஜெய்ப்பூர் மற்றும் சிகர் (இராஜஸ்தான்)
    - குருஷேத்ரா (ஹரியானா)

- மதுரா, பிருந்தாவனம், நந்தகவோன், கோகுல், பார்சானா மற்றும் கோவார்தன் (உத்திரப்பிரதேசம்).
- புரி (ஒடிசா)

***சுவதேஷ் தர்ஷன்***

❖ நாட்டில் கருத்தியல் அடிப்படையிலான சுற்றுலாப் பகுதிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு சுற்றுலா அமைச்சகத்தால் சுவதேஷ் தர்ஷன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ பொது நிதியளிப்பிற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களின் கூறுகளுக்காக இத்திட்டத்திற்கு 100% நிதி மத்திய அரசால் அளிக்கப்படுகிறது.

❖ இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் தொலைநோக்கு பார்வை ஆகியவற்றை வழிநடத்திச் செல்வதற்காக சுற்றுலாத்துறை அமைச்சரை (பொறுப்பு) தலைவராகக் கொண்டு தேசிய வழிகாட்டும் குழு ஒன்று அமைக்கப்படும்.

❖ தேசிய வழிகாட்டும் குழுவின் உறுப்பினர் செயலாளரை தலைவராகக் கொண்ட திட்ட இயக்குநரகம், மாநில/ஒன்றியப்பிரதேச அரசுகள் மற்றும் பிற நடுநிலையாளர்களுடன் கலந்தாலோசித்து திட்டங்களை அடையாளம் காண உதவி புரியும்.

❖ திட்ட மேலாண்மை ஆலோசகர், திட்ட இயக்குநரகத்தால் நியமிக்கப்படும் தேசிய அளவிலான ஆலோசகர் ஆவார்.

# பொருளாதாரச் செய்திகள்

## நிஃப்டி பங்கு சேமிப்புக் குறியீடு

❖ தேசியப் பங்குச்சந்தையின் ஒரு அங்கமான இந்திய குறியீட்டு சேவைகள் மற்றும் பொருட்கள் லிமிடெட் ஆனது நிஃப்டி பங்கு சேமிப்பு குறியீட்டை தொடங்கியுள்ளது.

**NIFTY Equity Savings**

NIFTY Equity Savings Index captures performance of a portfolio having exposure to equity, equity arbitrage and debt instruments. This index is a total return index capturing price return and dividend/coupon income.

**Portfolio Characteristics**

| | |
|---|---|
| Methodology | Total Returns |
| Launch Date | April 24, 2018 |
| Base Date | April 01, 2005 |
| Base Value | 1000 |
| Calculation Frequency | EOD Daily |

**Statistics**

| | QTD | YTD | 1 Year | 5 Years | Since Inception |
|---|---|---|---|---|---|
| Returns (%) # | -0.32 | -0.32 | 7.90 | 9.93 | 9.41 |

| | 1 Year | 5 Years | Since Inception |
|---|---|---|---|
| Std. Deviation * | 3.6 | 5.3 | 7.7 |

*# QTD,YTD and 1 year returns are absolute returns.Returns for greater than one year are CAGR returns. * Average daily standard deviation annualised*

**Weights of Index Constituents**

| Index components | Weights |
|---|---|
| NIFTY 50 Total Return Index | 35% |
| Equity arbitrage | 30% |
| NIFTY Short Duration Debt Index | 30% |
| NIFTY 1D Rate Index | 5% |

❖ நிஃப்டி பங்கு சேமிப்பு குறியீடு பல்வேறு பரஸ்பர நிதிகளால் வழங்கப்படும் பங்கு சேமிப்பு நிதிகளுக்கான திறனளவாக (Bench mark) செயல்படும்.

❖ இலாப பங்குத் தொகையால் வரும் வருமானம் மற்றும் விலை நகர்வுத் தொகை

(இலாபம்/நட்டம்) ஆகியவற்றை அளவிடும் ஒரு மொத்த ஆதாயக் குறியீடே இக்குறியீடு ஆகும்.

- இக்குறியீட்டிற்கான அடிப்படை தேதி ஏப்ரல் 1 2005 மற்றும் அடிப்படை மதிப்பு 1000 ஆகும். இக்குறியீடு நாளின் இறுதி நேர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

***குறியீட்டு சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருள் நிறுவனம்***

- 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் மஹாராஷ்டிராவின் மும்பையில் அமைந்துள்ளது.
- இது பல்வேறு வகைப்பட்ட குறியீடுகள், குறியீடு தொடர்பான சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களை மூலதன சந்தைகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இது தேசிய பங்குச் சந்தையின் உத்திசார் முதலீட்டு நிறுவனத்தின் துணை அமைப்பாக செயல்படுகிறது.

## ஃபிட்ச் – இந்தியாவின் இறையாண்மை மதிப்பீடு

- சர்வதேச மதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச் தரநிர்ணய நிறுவனம் இந்தியாவின் இறையாண்மை மதிப்பீட்டை மேம்படுத்தாததோடு, நிலையான நோக்கோடு BBB– என்றளவில் இந்தியாவின் மிகக்குறைந்த அளவிலான முதலீட்டுத் தரத்தை மறு உறுதி செய்துள்ளது.
- இம்மதிப்பீட்டு மேம்பாடு, நாட்டின் விவரத்தை (Profile) மாற்றியமைப்பதோடு, முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான ஒரு கருவியாகவும் உள்ளது.
- கடந்த ஆண்டு 6.6% ஆக குறைந்த பொருளாதாரத்தை 2018-2019-ல் 7.3% ஆகவும் 2019-2020-ல் 7.5% ஆகவும் வளர்ச்சியடைவதற்கு புத்தாக்கம் பெற வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டியுள்ளது.
- ஆளுகைகள் மற்றும் தரநிலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பலவீனமான நிதியளிப்பு மற்றும் சில பின்தங்கிய அமைப்பு ரீதியிலான காரணிகள், தற்போது வரையில் கடினமான ஆனால் மேம்பாடடையும் பொருளாதார சூழல் ஆகியவை இந்த மதீப்பீடு செயல்பாட்டுக்கான காரணிகளாகும்.
- பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 2017 – ல் மூடி நிறுவனம் இந்தியாவின் மதிப்பீட்டை Baa3 லிருந்து Baa 2 நிலைக்கு உயர்த்திய போதும், ஸ்டேன்டர்ட்ஸ் மற்றும் பூவர்ஸ் (S&P) நிறுவனம், நிலையான நோக்கோடு (Stable outlook) இந்தியாவின் மதிப்பை BBB – என்ற அளவிலேயே நிர்ணயித்துள்ளது.

***இறையாண்மை நன்மதிப்பு மதிப்பீடு***

- இறையாண்மை நன்மதிப்பு மதிப்பீடு, குறிப்பிட்ட நாட்டில் முதலீடு செய்யும் போது அங்கு நிலவி வரும் அரசியல் இடர்பாடுகள் மற்றும் முதலீட்டில் உள்ள இடர்பாடுகள் ஆகியவை தொடர்பான நுண்ணறிவை முதலீட்டாளர்களுக்கு வழங்குகிறது.
- ஃபிட்ச் மதிப்பீடு, மூடியின் முதலீட்டு சேவை மற்றும் ஸ்டாண்டர்ட்ஸ் மற்றும் பூவர்ஸ் ஆகியவை ஏறக்குறைய 95% அளவிலான உலகளாவிய வணிக மதிப்பீடுகளை கட்டுப்படுத்தும் மூன்று பெரிய சர்வதேச கடன் மதிப்பீட்டு நிறுவனங்களாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## டெர்பி வான் – வான் கண்ணுறு தொலைவிற்கு அப்பாலான ஏவுகணை

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமானமான தேஜஸ், டெர்பி என்ற (வான் – வான்) கண்ணுறு தொலைவிற்கு அப்பாலான ஏவுகணையை கோவா கடற்பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இந்த வெற்றிகரமான சோதனையானது, ஒரு திறனான ஒலியை விட வேகமாக செல்லும் போர் விமானம் எனும் வகையில் தேஜஸின் ஒட்டு மொத்த திறனையும் நிரூபித்துக் காட்டியுள்ளது.
- தேஜஸ் ஆனது HAL (Hindustan Aeronautics Limited) மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (DRDO) வானூர்தி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.
- டெர்பி என்பது, சிறு முதல் நடுத்தர அளவிலான கண்ணுறு பகுதியைத் தாண்டிய வானிலிருந்து வானிலுள்ள இலக்கை தாக்கும் ஏவுகணை ஆகும். இது ஒரு இருபயன்பாட்டு (வானிலிருந்து வானிலுள்ள இலக்கைத் தாக்கும், தரையிலிருந்து வானிலுள்ள இலக்கை தாக்கும்) ஏவுகணையாகும்.
- டெர்பி, இஸ்ரேலிய போர்த்தளவாட மேம்பாட்டு நிறுவனமான ரஃபேல் மற்றும் இஸ்ரேல் வானூர்தி தொழிற்சாலை MBT ஆகியவற்றின் கூட்டிணைவால் தயாரிக்கப்பட்டது.
- கீழ்நோக்கிய பார்வை மற்றும் கீழ்நோக்கிய தாக்குதல் ஆகிய திறமைகளைக் கொண்டுள்ள டெர்பி, ஏவுதல் மற்றும் தன்னிச்சையாக செயல்படும் (Fire and Forget) நிலை மற்றும் மேம்படுத்தப்பட்ட மின்னணு எதிர் நடவடிக்கைகள் ஆகியவற்றை வாடிக்கையாளர்களின் செயல்பாட்டுத் தேவைகளுக்காக கொண்டுள்ளது.

## நேர முத்திரையிடல் மற்றும் நேர ஒத்திசைவு வலைப்பின்னல்

- CSIR – NPL (தேசிய இயற்பியல் ஆய்வகம்) மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகியவை தேசிய அளவிலான நேர முத்திரையிடல் நேர ஒத்திசைவு வலைப்பின்னலை (Time Stamping and Time Synchronization Network - TSTSN) நிறுவுவதற்கும், தேசிய இயற்பியல் ஆய்வகத்தின் UTC (Coordinated Universal Time) நேரத்திற்கு நேர சமிக்ஞையை கண்டறிதல் ஆகியவற்றிற்காக தொழில்நுட்ப அறிவை பரிமாற்றுதல் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை பதிவு செய்தல் என்பது ஒரு நிகழ்ச்சியின் நேர முத்திரையிடல் என குறிப்பிடப்படுகிறது.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைமுறைகளின் படி தொலைத் தொடர்புத்துறை நாடு முழுவதும் அமைக்கப்படும் நேர முத்திரையிடல் மற்றும் நேர ஒத்திசைவு வலைப்பின்னல் ஆனது CSIR – NPL -இன் (National Physical Laboratory) தொழில்நுட்ப உதவியோடு 22 நேர ஒத்திசைவு மையங்களைக் கொண்டிருக்கும்.
- இந்தியா முழுவதும் உள்ள அனைத்து தொலைத் தொடர்பு மற்றும் இணைய சேவை வழங்குநர்களுக்கு இந்திய நேரத்தில் (IST) ஒத்திசைவு துடிப்பு அலைகளை (Synchronising Pulses) இந்த வலைப்பின்னல் வழங்கும்.
- IST நேர முத்திரையுடன் தொலைத்தொடர்பு வலைப்பின்னலை ஒத்திசையச் செய்தலானது இணைய நிகழ்வுகளை தொடர்புபடுத்துதல் மற்றும் ஆராய்தல் ஆகியவற்றில் உள்ள கடினத் தன்மையை சரிசெய்வதற்கு பாதுகாப்பு நிறுவனங்களை இயலச் செய்வதோடு இணைய நெறிமுறை வழியிலான குரல்

தொடர்பு (Voice over Internet Protocol – VOIP) துண்டிப்பை குறைப்பதன் மூலம் தொலைத்தொடர்பு வலைப்பின்னல் திறனளவை மேம்படுத்தும்.

- ❖ CSIR – NPL ஆனது இந்திய நேரத்தை (IST) உருவாக்கல், நிர்வகித்தல் மற்றும் பரவச் செய்தல் ஆகியவற்றிற்கு பொறுப்புடைமையுடைய அமைப்பாகும்.

- - - - - - - - - - - - - - -